" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2009ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28-ம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் : "மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும் "**

**பொருள் :** நாள்தோறும் ஓதிவரும் மறை நூலினை ஒரு நாள் மறக்க நேர்ந்தாலும், மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் ஒருதடவை தவறினாலும் முற்றிலும் கெட்டதாகவே மாறிவிடும்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன், தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு. எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம். வாக்கு. செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று. இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும். பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன், இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்,

(அரசாணை (நிலை) எண்,245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) சி.டபிள்யு.3/3837/2009**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2) ன்படி 01.10.2009 ம் தேதி நடைபெற்ற சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண்.798**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) H3/28129/06**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் அனைத்து மண்டலங்களில் உள்ள பகுதிகளில் சிக்குன் குனியா மற்றும் டெங்கு காய்ச்சல் நோய்கள் பரவாமல் தடுக்கும் சிறப்பு பணியை செய்வதற்காக தினக்கூலி அடிப்படையில் மண்டலத்திற்கு தலா 25 நபர்கள் வீதம் மொத்தம் 4 மண்டலத்திற்கு 100 தினக்கூலிகள் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த விலை விகிதமான தினக்கூலி ரூ.105/- கொடுத்துள்ள Bright Enviroment Awerness Unit

Trust of Youth, Madurai நிறுவனத்தார் 01.10.2009 முதல் 31.12.2009 முடிய மூன்று மாதங்களுக்கு மட்டும் மண்டலத்திற்கு தலா 25 தினக்கூலிகள் வீதம் மொத்தம் 4 மண்டலத்திற்கு மொத்தம் 100 தினக்கூலிகள் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வதற்கு சப்ளை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மேற்படி செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.799**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 3) Jn.S.2/21020/08

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறும் அவனியாபுரம் 125 MLD கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சக்கிமங்கலம் 45.7 MLD கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சிவில், மெக்கானிக்கல் மற்றும் எலெக்ட்ரிக்கல் பணிகள் மற்றும் அதனை சார்ந்த இயந்திரங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து தரம் மற்றும் அளவுகளை ஒப்பந்த விதிகளின் படி உறுதிசெய்து, தேவைப்படும் அறிவுரைகள் வழங்கும் மூன்றாம் நபர் தொழில்நுட்ப ஆலோசகராக இருப்பதற்கு, திருச்சி, நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி என்ற மத்திய அரசின் பொறியியல் கல்லூரி சம்மதித்து, அதற்காக ரூ.15.00/– இலட்சம் கட்டணமாக நிர்ணயித்துள்ளனர். இந்த தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவதற்கான கட்டணமான ரூ.15.00/- இலட்சத்தை மேற்படி கல்லூரிக்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.800**
**மீண்டும் பரிசீலனை செய்து மாமன்ற கூட்டத்தில் வைக்க வேண்டியது.**

## 4) B26/6035/09

தமிழ்நாடு மாநில அரசு அலுவலர்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொது வருங்கால வைப்பு நிதியின் மாதச் சந்தாவினை தற்போது பெறப்படும் அடிப்படை ஊதியம் (Basic Pay), தர ஊதியம் (Grade Pay), சிறப்பு ஊதியம் (Special Pay), தனி ஊதியம் (Personal Pay), அகவிலைப்படி (Dearness Allowance), ஆகியவற்றைச் சேர்த்து தற்போது உள்ள 12 சதவீகிதத்திலேயே பொது வருங்கால வைப்பு நிதி மாதச் சந்தாவினை பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்று வெளியிடப்பட்டுள்ள 22.09.09ம் தேதிய 461 எண்ணுள்ள நிதி (படிகள்) துறை அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.801**
**பதிவு செய்யப்பட்டது.**

## 5) B1/39373/08

தமிழ்நாடு அரசு மற்றும் மாநகராட்சி ஓய்வூதியர்களுக்கு மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு ஏற்கனவே 01.01.2009 முதல் வழங்கப்பட்டு வந்த 22% அகவிலைப்படியை 01.07.2009 முதல் அகவிலைப்படியை 27% சதவீதமாக உயர்த்தி வழங்க வெளியிடப்பட்டுள்ள நிதி (படிகள்) துறையின் 05.10.2009ம் தேதிய 482 எண்ணிட்ட அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு:

1) மேற்படி அகவிலைப்படி உயர்ந்த தொகை 01.07.2009 முதல் ஓய்வூதியர்களுக்கு / குடும்ப ஓய்வூதியர்களுக்கு ரொக்கமாக வழங்கப்படும்.
2) மேற்படி அகவிலைப்படி உயர்வினால் மாநகராட்சிக்கு மாதத்திற்கு உத்தேசமாக ரூ.30,00,000/- கூடுதலாக செலவாகும்.

**மாமன்ற தீர்மானம் எண்.802**
**பதிவு செய்யப்பட்டது.**

## 6) B1/39373/08

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஏற்கனவே 01.01.2009 முதல் வழங்கப்பட்டு வந்த 22% அகவிலைப்படியை 01.07.2009 முதல் அகவிலைப்படியை 27% சதவீதமாக உயர்த்தி வழங்க வெளியிடப்பட்டுள்ள நிதி (படிகள்) துறையின் 470 எண்ணுள்ள 22.09.2009 தேதிய அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு:

1) மேற்படி அகவிலைப்படி உயர்ந்த தொகை 01.07.2009 முதல் ரொக்கமாக வழங்கப்படும்.
2) மேற்படி அகவிலைப்படி உயர்வினால் மாநகராட்சிக்கு மாதத்திற்கு ரூ.40,00,000/- கூடுதலாக செலவாகும்.

**மாமன்ற தீர்மானம் எண்.803**
**பதிவு செய்யப்பட்டது.**

**7) மநு2/13848/2009**

இம்மாநகராட்சி பொது சுகாதாரத்துறையின் கீழ் இயங்கும் நாய்கள் கருத்தடை மற்றும் வெறி நோய் கடி தடுப்பூசி (நாய்களுக்கு) மையத்தின் சில்லரை செலவினங்களுக்காக சம்பந்தப்பட்ட மைய பொறுப்பு வகிக்கும் கால்நடை உதவி மருத்துவருக்கு நிரந்தர முன் பணமாக ரூ.10,000/- வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.804**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**8) B30 / 26298 /09**

மதுரை மாநகராட்சிக்குத் தேவையான கனரக ஓட்டுநர்கள், இலகுரக ஓட்டுநர்கள், காவலர்கள், மின் கம்பியாளர்கள், கணினி உதவியாளர்கள், தொழில் நுட்ப உதவியாளர்கள் மற்றும் குடிநீர், பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளுக்குத் தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் ஆகியோரை ஒப்பந்த அடிப்படையில் மாநகராட்சியின் நிபந்தனைகளை ஏற்று வெளிக்கொணர்வு முறையின் படி (Out Source Method) பணியாளர்களை சப்ளை செய்ய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது.

வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி மற்றும் விலை விபரம் ஒப்பீடு செய்யப்பட்டு, குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர்கள் விபரம் கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியாளர்களின் தன்மை மற்றும் கோப்பு எண் | பணிபுரியும் இடம் | பணியாளர்களின் எண்ணிக்கை | ஒப்பந்தக்காரர்களின் பெயர் மற்றும் விலை விகித விபரம் |
|---|---|---|---|---|
| 1. | B30 / 24088/ 2009<br>தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | வடக்கு | 122 நபர்கள் | M/s. பிரைட் என்விரான்மெண்ட் அவர்னஸ் டிரஸ்ட் (0.02% குறைவு) |
| 2. | B30 / 24089/ 2009<br>தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | கிழக்கு | 90 நபர்கள் | M/s. பிரைட் என்விரான்மெண்ட் அவர்னஸ் டிரஸ்ட் (0.02% குறைவு) |
| 3. | B30 / 24090/ 2009<br>தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | மேற்கு | 69 நபர்கள் | M/s. பிரைட் என்விரான்மெண்ட் அவர்னஸ் டிரஸ்ட் (0.02% குறைவு) |
| 4. | B30 / 24091/ 2009<br>தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | தெற்கு | 76 நபர்கள் | M/s. பிரைட் என்விரான்மெண்ட் அவர்னஸ் டிரஸ்ட் (0.02% குறைவு) |
| 5. | B30 / 24092/ 2009<br>கணினி உதவியாளர்கள் | மைய அலுவலகம் (பொறியியல் பிரிவு) | 8 நபர்கள் | M/s. இண்டஸ்ட்ரியல் செக்யூரிட்டி பீரோ (0.97% குறைவு) |
| 6. | B30 / 26298/ 2009<br>தொழில் நுட்ப உதவியாளர்கள் | அனைத்து மண்டலங்கள் | 42 நபர்கள் | M/s. இண்டஸ்ட்ரியல் செக்யூரிட்டி பீரோ (1.96% குறைவு) |
| 7. | B30 / 24086/ 2009<br>மின் கம்பியாளர்கள் | அனைத்து மண்டலங்கள் | 32 நபர்கள் | M/s. இண்டஸ்ட்ரியல் செக்யூரிட்டி பீரோ (1.16% குறைவு) |
| 8. | B30 / 24294/ 2009<br>கனரக வாகன ஓட்டுநர்கள் | அனைத்து மண்டலங்கள் | 85 நபர்கள் | M/s. கிளின் கேர் சர்வீஸ் சென்டர் (0.05% குறைவு) |
| 9. | B30 / 24296/ 2009<br>இலகுரக வாகன ஓட்டுநர்கள் | அனைத்து மண்டலங்கள் | 35 நபர்கள் | M/s. குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி (0.53% குறைவு) |
| 10. | B30 / 24295/ 2009<br>காவலர்கள் | அனைத்து மண்டலங்கள் | 117 நபர்கள் | M/s. அம்மா செக்யூரிட்டி சர்வீஸ் (7.46 குறைவு) |
| 11. | B30 / 24297/ 2009<br>வாட்டர் சர்வீஸ் - தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | லாரி நிறுத்துமிடம் | 12 நபர்கள் | M/s. குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி (0.09% குறைவு) |
| 12. | Q1 / 26267 / 2009<br>கணிப்பொறி உதவியாளர்கள் | மைய மற்றும் மண்டல அலுவலகங்கள் | 45 நபர்கள் | M/s. ஸ்ரீ ராகவேந்திரா கம்ப்யூட்டர்ஸ் (4.71% குறைவு) |

மேற்கண்ட விலை விகிதத்தை ஏற்று அவசர அவசியத்தினை முன்னிட்டு வணக்கத்திற்குரியமேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெறப்பட்டு, சப்ளை உத்தரவு வழங்கியுள்ள விபரத்தை மாமன்றத்தின் தகவலுக்கு சமர்ப்பிக்கும் ஆணையாளரின் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.805**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**9) மபொ4/38954/09**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையங்கள் மற்றும் சாலை ஓரங்களில் புதியதாக நவீன சுகாதார வசதிகளுடன் கூடிய இலவச கழிப்பறை கட்டிடங்களை வடிவமைத்து உருவாக்குதல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைக்கும் (DBOOT) திட்டத்திற்குள் இயக்கி தனியார் நிறுவனங்களின் மூலம் கழிப்பறைகளை நவீனப்படுத்துவதற்கு மாமன்ற தீர்மானம் எண். 733, நாள். 16.07.09 மூலம் ஒப்புதல் தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் அதனெதிரே குறிப்பிட்டுள்ள இடங்களில் DBOOT முறையில் கட்டி 10 வருடக் காலத்திற்கு பராமரித்துக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்கள். மேற்கண்ட நிறுவனத்தினர் கழிப்பறையின் சுவற்றில் விளம்பரம் செய்து கொண்டு அதன் மூலம் கிடைக்கும் வருவாய் மூலம் பராமரித்துக் கொள்ளவும், கட்டணமின்றி இலவசமாக செயல்படுத்த வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று, பணிகள் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சிக்கு சொந்தமில்லாத பிற துறைகளிடமிருந்து சம்பந்தப்பட்ட நிறுவனத்தினரே தடையில்லா சான்று பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண். | மண்டலம் | கழிப்பறை அமைவிடம் | அமைப்பாளர் விபரம் |
|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* |
| 1 | 5 | வடக்கு | புதுார் பேருந்து நிலையம் | M/s. வேன்டேஜ் விளம்பர நிறுவனம் |
| 2 | 6 | வடக்கு | மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் (உள்புறம்) | M/s. P.R.P. நிறுவனத்தார் |
| 3 | 6 | வடக்கு | மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் (வெளிபுறம்) | M/s. வேலம்மாள் கல்வி அறக்கட்டளை |
| 4 | 9 | வடக்கு | அண்ணா பேருந்து நிலையம் | M/s. P.R.P. நிறுவனத்தார் |
| 5 | 11 | வடக்கு | பனகல் சாலை ராஜாஜி மருத்துவமனை எதிரில் | M/s. யோகா நிறுவனத்தார் |
| 6 | 16 | வடக்கு | பாலம் ஸ்டேசன் ரோடு @ குமரன் சாலை சந்திப்பு | M/s. சேம்பர் ஆப் காமர்ஸ் |
| 7 | 46 | கிழக்கு | மஉறால் பூங்கா வளாகம் | M/s. TVS நிறுவனத்தினர் |
| 8 | 68 | மேற்கு | பைபாஸ் சாலை @ நடராஜ் தியேட்டர் அருகில் | M/s. போத்தீஸ், மேலமாசி வீதி |
| 9 | 71 | மேற்கு | பைபாஸ் சாலை @ குரு தியேட்டர் அருகில் | M/s. GHCL Ltd., (A Unit of Meenakshi Mill) |
| 10 | 25 | மேற்கு | ஆரப்பாளையம் OHT (வைகை காலனி அருகில்) | M/s. TVS நிறுவனத்தினர் |
| 11 | 37 | தெற்கு | மீனாட்சி பூங்கா வளாகம் | M/s. வேன்டேஜ் விளம்பர நிறுவனம் |
| 12 | 31 | தெற்கு | பெரியார் பேருந்து நிலையம் | M/s. அழகேந்திரா ஆட்டோ மொபைல்ஸ், வடக்கு வெளி வீதி |
| 13 | 42 | தெற்கு | ஜெய்உறிந்த்புரம் மார்கெட் அருகில் | M/s. R.R. Construction நிறுவனத்தார், மதுரை–2 |
| 14 | 50 | கிழக்கு | தெப்பக்குளம் (காமராஜ் திருமண மண்டபம் அருகில்) | M/s. கொரமெண்டல் இன்டர்நேஷனல் நிறுவனம், சென்னை |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | 68 | மேற்கு | பழங்காநத்தம் பேருந்து நிறுத்தம் | M/s. கொரமெண்டல் இன்டர்நேஷனல் நிறுவனம், சென்னை |
| 16 | 13 | வடக்கு | நரிமேடு பி.டி. ராஜன் சாலை | M/s. கொரமெண்டல் இன்டர்நேஷனல் நிறுவனம், சென்னை |
| 17 | -- | வடக்கு | உள்வட்டச் சாலை அருகில் (பாண்டிகோவில் அருகில்) | M/s. கொரமெண்டல் இன்டர்நேஷனல் நிறுவனம், சென்னை |

மேற்கண்டவாறு DBOOT முறையில் நவீன கழிப்பறைகள் கட்டிக் கொள்ள விருப்பம் தெரிவித்த மேற்கண்ட தனியார் நிறுவனங்களுக்கு நிபந்தனைகளின் அடிப்படையிலும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.806**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

**மதுரை**
**நாள் :28.10.2009**

* * * * * * *

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி
# மாமன்றக் கூட்டம்

**2009ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28-ம் நாள் புதன்கிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) தெ.பொ.3/18024/2008**

மதுரை மாநகராட்சி வார்டு 36, மேலக்கோபுரத் தெரு, நகரளவு எண்.104/1, க.எண்.46ல் ஏற்கனவே உள்ள கட்டிடம் முழுவதையும் அகற்றிவிட்டு புதிதாக ஸ்ரீசுமதிநாத் ஜெயின் கோவில் கட்ட உத்தேசித்து அனுமதிகோரி 02.12.2008–ல் வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டது. உத்தேசக் கட்டிடம் வழிபாட்டுத் தலமாக இருப்பதால், கட்டிட விதி 5(3)–ன்படி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆட்சேபணையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்கும்படி மனுதாரரை கோரப்பட்டது. அதன்பேரில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனுதாரர் 03.02.08ல் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் மேல் இம்மாநகராட்சியின் ஆட்சேபணையில்லா சான்றினை மாமன்றத் தீர்மான வடிவில் அனுப்பி வைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் தமது ந.க.எண்.சி3/105379/08, நாள்:18.09.09 கடிதத்தில் கோரியிருக்கிறார்.

பிரஸ்தாப இடம் திட்டமில்லாத பகுதியில் அமைந்துள்ளது. உத்தேச ஜெயின் கோவில் கட்டிடம் ஏனைய விதிகளைத் திருப்தி செய்வதால் மாவட்ட ஆட்சித்தலைவர் வழிபாட்டு தலம் கட்ட உரிய உத்தரவு வழங்க இம்மாநகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என்பதனை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டதில், மாமன்றத் தீர்மானம் எண்.792 நாள்: 24.09.09-ல் மீண்டும் பரிசீலனை செய்து அடுத்த மாமன்ற கூட்டத்தில் வைக்கவேண்டியது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி மேற்படி வழிபாட்டு தலம் கட்ட உரிய உத்தரவு வழங்க இம்மாநகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என்பதனை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

மாமன்ற தீர்மானம் எண்.807
குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.

**2) JnS1/33923/06**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் வளர்ந்து வரும் சாலை போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும் பொருட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்படி தற்பொழுதுள்ள மாநகராட்சி சுற்றுச்சாலை 60 மீட்டர் அகலத்திற்கு விரிவுபடுத்தவும் மேலும் விமானம் நிலையம் விரிவாக்கத்திற்காக எடுக்கப்படும் சுற்றுச்சாலைக்குப் பதிலாக மாற்றுச்சாலை அமைக்கவும் மெசர்ஸ் Stup கன்சல்டன்சி மூலம் திட்டம் தயார் செய்து வரப்பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு சாலையில் இரண்டு புறமும் உள்ள நிலங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு நில ஆர்ஜிதம் செய்ய மாமன்ற ஒப்புதலுக்கு கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மதுரை மாநகராட்சி நில ஆர்ஜிதம் செய்ய உள்ள இடத்தின் சர்வே எண்கள் பரப்பு 3 முதல் கி.மீ 17/800 முதல் 27/200 வரை**

| வ.எண் | கிராமத்தின் பெயர் | செயினேஜ் | | சர்வே எண்கள் |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | |
| பரப்பு **1** முதல் கி.மீ 0/000 முதல் 14/000 | | | | |
| 1 | உத்தங்குடி | 0/000 | 1/100 | 141,146,148,149,150,151,152,153,154, 155,156,157,161,162,163,164,166 |
| 2 | இளந்தைகுளம் | 1/500 | 1/600 | 1 |
| 3 | மேலமடை | 1/600 | 2/300 | 1,2,4,5,8,9,10,11,15,16,17 |
| 4 | வண்டியூர் | 2/300 | 5/600 | 7,12,13,14,15,16,36,37,39,40,41,71,72, 73,76,77,78,79,80,103,104,105,120,125, 128,129,130,134,135,136,170,174,175, 176,177,181,182,183,197,198,199,200, 201,204,214,215,216,217,219,230,231, 233, 234 |
| 5 | விரகனூர் | 5/600 | 7/000 | 67,68,69,70,71,81,82,83,84,89,90,91,92, 116,117,118,119,120,122,123,126,127, 128 |
| 6 | வீரக்குடி | 7/000 | 7/400 | 4,5,19,20,21,22,23 |
| 7 | பனையூர் | 7/400 | 8/300 | 3,4,5,6,23,129 |
| 8 | அனுப்பானடி | 8/300 | 8/700 | 79,80,81,82,83 |
| 9 | சிந்தாமணி | 8/700 | 10/400 | 7,13,14,15,16,17,18,23,28,29,30,81,84, 85,86,87,89,90,91,92,99,100,101,105, 106,107,115,116,117,118,119,121,123, 124, 125,126 |
| 10 | சாமநத்தம் | 10/400 | 10/700 | 79,80,82,84 |
| 11 | அவனியாபுரம் | 10/700 | 12/400 | 200,207,208,209,210,211,212,213,219, 220,221,222,228,231,232,233,234,235, 236,267,268,269,266 |
| பரப்பு **3** முதல் கி.மீ 17/800 முதல் 27/200 | | | | |
| 12 | வளையங்குளம் | 17/800 | 18/700 | 4,6,7,8,67,68,69,70,71,75,76,77,78 |
| 13 | தொட்டியபட்டி | 18/700 | 19/000 | 84,85 |
| 14 | வலையபட்டி | 19/000 | 21/300 | 1,2,3,4,5,6,7,8,9,10,58,59,60,61,66,67,82 83,85,87,96 |
| 15 | சூரக்குளம் | 21/300 | 22/300 | 1,2,3,4,5,6,7,20 |
| 16 | நிலையூர் | 22/300 | 24/800 | 93,94,96,156,158,159,160,161,162,170, 171,211,218,219,220,226,230,231,232, 238,239,247,248,249,250,251,253,254, 390 |
| 17 | எம். புளியங்குளம் | 24/800 | 25/900 | 1,2,3,4,5,6,8,9,10,28,29,30,32,33 |
| 18 | கப்பலூர் | 25/900 | 26/100 | 1,2,3,4,5,6 |
| 19 | சொக்கநாதன்பட்டி | 26/100 | 26/700 | 33,36,40,41,42,43,44,45,46 |
| 20 | பழக்கபுதுப்பட்டி | 26/700 | 27/200 | 19,20,21,22,30,33,34,35 |

**நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய சர்வே எண்கள் (விமான நிலையம் புறவழிச்சாலை தொடர்பாக) கி.மீ.0/000 முதல் 6/400**

**பகுதி – 2**

| வ.எண் | கிராமத்தின் பெயர் | செயினேஜ் | | சர்வே எண்கள் |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | |
| 1 | அய்யன் பாப்பாகுடி | 0/000 | 1/500 | 63,66,280,281,286,303,304,305,308,309, 311,313,314,315,316,321,322,327,329, 371,372,379,381,407,408,409,410,454, 455,456,457,489 |
| 2 | பெருங்குடி | 1/500 | 4/100 | 138,139,140,141,142,145,146,147,163, 164,165,168,169,174,175,176,177,198, 212,213,219,220,221,222,311,317,318, 319,320,321 |
| 3 | வாழனேந்தல் | 4/100 | 5/000 | 11,49,50 |
| 4 | புதுகுளம் | 5/000 | 6/200 | 1 |

<u>மாமன்ற தீர்மானம் எண்.808</u>
<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

**<u>3) CW3/30044/09</u>**

அரவிந்த் கண் மருத்துவமனை நிறுவனரும், இந்திய அரசிடமிருந்து பத்மஸ்ரீ விருதையும், பல சர்வதேச விருதுகளையும் பெற்றவருமான டாக்டர்.ஜி.வெங்கடசாமி அவர்களின் நினைவாக அரவிந்து கண்மருத்துவமனை அமைந்துள்ள அண்ணாநகர் பிரதான சாலைக்கு (லைக்கோ முனை முதல் சுகுணா ஸ்டோர் முனை வரையிலுள்ள சாலை) "டாக்டர்.ஜி.வெங்கடசாமி சாலை" என்று பெயரிட கோரியுள்ள அரவிந்த் கண்மருத்துவமனை தலைவரின்18.10.2009–ம் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு, அரவிந்த் கண்மருத்துவமனை அமைந்துள்ள அண்ணாநகர் பிரதான சாலைக்கு (லைக்கோ முனை முதல் சுகுணா ஸ்டோர் முனை வரை) "டாக்டர்.ஜி.வெங்கடசாமி சாலை" என்று பெயரிட்டு உரிய ஆவணங்களில் திருத்தம் செய்ய அரசைக் கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண்.809</u>
<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

**<u>4) ம.தி1/26154/09</u>**

மதுரை தெற்கு வட்டம், வடக்கு மதுரை கிராமம், சர்வே எண்.டி.எஸ்.943ல் வாய்க்கால் புறம்புகளில் 0.02 செண்ட் இடத்தில் திரு.கே.பாஸ்கரன் என்பவர் குடிசை போட்டு குடியிருந்து வருவதாகவும், இவர் கடந்த 1974 முதல் இன்று வரையில் பொதுப்பணித்துறையினரால் நிர்ணயிக்கப்பட்ட குத்தகை தொகையினை செலுத்தி வருவதாகவும், மேற்படி இடத்திற்கு பட்டா வழங்க பொதுப்பணித்துறையினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி இடம் மதுரை மாநகராட்சி எல்லை கட்டுப்பாட்டில் உள்ளதால், பட்டா வழங்க மாமன்றத்திற்கு ஆட்சேபணையில்லையென தீர்மானம் பெற்று அனுப்பி வைக்கும்படி கோரிய மதுரை தெற்கு வட்டாட்சியர் கடிதம் ந.க.எண்.31285/08/சி3, நாள்: .09.2009, வாசிக்கப்பட்டு இடம் ஆய்வு செய்யப்பட்டதில் மதுரை தெற்கு வட்டம், வடக்கு மதுரை கிராமம், புதிய சர்வே எண்.938–ல் வாய்க்கால் புறம்புகளில் 0.02 செண்ட் இடத்தில் திரு.கே.பாஸ்கரன் என்பவர் குடிசை அமைத்து வசித்து வருகிறார்.

மேற்படி இடத்திற்கு பட்டா வழங்க பொதுப்பணித்துறையினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாலும், மதுரை தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து பட்டா வழங்க ஆட்சேபணையின்மையை மாமன்றத் தீர்மானம் பெற்று அனுப்பிவைக்கும்படி கோரியுள்ளதாலும் மேற்படி இடத்திற்கு பட்டா வழங்க ஆட்சேபணையின்மை தெரிவிப்பது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.810**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

***வணக்கத்திற்குரிய மேயர் பிரேரரிக்கும் தீர்மானம்***

**செல்லூர் கண்மாய் தூர் வாராமல் கரையை மட்டும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கண்மாய் தூர் வாராமல் உள்ளதால் உட்பகுதியும், கரையை ஒட்டியுள்ள வெளியில் உள்ள சாலையும் ஒரே சமமாக உள்ளதால், இந்த கண்மாயில் தண்ணீர் தேக்குவதற்கான வாய்ப்பு இல்லை. மேலும் இந்தப் பகுதியில் நிலத்தடிநீர் குறைய வாய்ப்பு உள்ளது. இது சம்பந்தமாக அனைத்துக் கட்சி மாமன்ற தலைவர்களும் இதே கருத்தை பேசியுள்ளதால், இந்த கண்மாயை தூர் வாரி ஆழப்படுத்தி தண்ணீர் தேக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுப்பணித்துறையை இம்மாமன்றம் கேட்டுக் கொள்கிறது.**

**(ஒம்.,) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 28.10.2009.**

* * * * * * * *